# வைத்திய சந்திரிகா.

ஓர் உயர்தர தமிழ் மாதப்பத்திரிகை.
பிரதி ஆங்கிலமாதம் முதல்வாரத்தில் வெளிவரும்

Vol. 5 | 1943 June | No. 6

விஷய சூசிகை பக்கம்

யோகரத்நாகரம் (பண்டிட் நாராயணய்யங்கார்)
ஹிருதயம் (வைத்தியகலாநிதி கரூர் பண்டிட் P. S ராமசர்மா அவர்கள் 1—2
உண்மை வெளிப்பட்டது (Dr K. S. அவர்கள்) 2

REGISTRAR OF BOOKS
9 - JUN 1943
MADRAS

**சந்தா விகிதம்.**

வருஷ சந்தா:—
உள்நாட்டிற்கு ரூ. 2
வெளிநாட்டிற்கு ரூ. 3

**விளம்பர விகிதம்.**

மாதம் 1-க்கு பக்கம் 1-க்கு ரூ 8
,, ,, ½-க்கு ரூ 4
,, ,, ¼-க்கு ரூ 2

கிடைக்குமிடம்:—

**Pandit, S. NARAYANA IYENGAR.**

**Editor and Publisher.**

No 2, Police Station West Lane, Madura.

காபிரைட்.] [விலை 0—3—0

வெங்கடேஸ்வர் பிரஸ், மதுரை—43.

**ஓர் அறிக்கை:**—சந்தாதாரர்களுக்கு சந்திரிகை சில சமயங்களில் சரியாகக் கிடைக்கவில்லை என்ற புகார் இருந்துவருகிறது. சரியாகப் பத்திரிகை கிடைக்காதவர்களுக்கு அந்த பத்திரிகையை தகவல் கிடைத்தால் நாம் வேறு பிரதி அனுப்பிவிடுவோம். ஆகவே அதைப்பற்றிய கவலை சந்தாதாரர்களுக்கு வேண்டாமென கேட்டுக் கொள்ளுகிறோம். பத்திராதிபர்.

**யோகரத்நாகரம்:**—இப் பெயர்கொண்ட வடமொழி நூலை சென்ற மேமாதம் தொடங்கி தமிழில் மொழிபெயர்த்து பாகம் பாகமாக சந்திரிகையில் வெளியிட்டுவருகிறோம். இதில் தனிப்பிரதிகள் கிடைக்காது, காகிதப்பஞ்சத்தால் சந்தாதாரர்களுக்கு மாத்திரம் கிடைக்கும்படி சொல்ப காபிகளே அச்சிடப்படுகின்றன.

**ஸஹஸ்ரயோகம்:**—இது மலையாள தேசத்தில் பிரசித்தமான ஓர் வடமொழி வைத்ய நூலின் தமிழ்மொழி பெயர்ப்பு. இந்நூலை யனுசரித்தே மலையாளத்தில் மருந்து முறைகள் தயாரிக்கப்படுகின்றன. இந்நூலில் கஷாய முறைகள் 181, கிருத முறைகள் 70 தைல முறைகள் 85 சூர்ண முறைகள் 89, லேகிய முறைகள் 20 குளிகை முறைகள் 73 சன்னிமருந்துகள் 75, கண்ரோகங்களுக்கு மருந்துகள் 92 காதுநோய்களுக்கு மருந்துகள் 6 மூக்குநோய்களுக்கு மருந்துகள் 6 முகரோகங்கள் 3 மருந்து, தொண்டைநோய்கள் மருந்துகள் 6 உள்வாய், ரோகங்களுக்கு மருந்துகள் 5 பலவகை மருந்து 158 ஆக இவ்விதம் மொத்தம் 837 மருந்துகள் விபக்தமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன; இந்த ஒரு நூலே வைத்யர்களுடைய தேவைக்கு போதுமானது. புத்தகம் விலை ரூ. 1 தபால்கூலி வேறு.

**ஔஷதசாரம்:**—இது பல வடமொழி நூல்களிலிருந்து அனுபவத்தில் வந்துள்ள பல முறைகள் அடங்கியது. இதில் முக்கியமான 41 நோய்களுக்கு ரோகவாரியாகத் தனித்தனி அத்யாயமாக மொத்தம் 234 மருந்துகள் சொல்லப்பட்டிருக்கின்றன. விரிவான செய்முறைகளுடனும் குறிப்புடனும் சேர்க்கப்பட்டுள்ளது.

விலை அணா 12 தபால்கூலி வகையறா வேறு.

**க்ஷயநோயும் சிகித்சையும்:**—இப்புத்தகத்தில் க்ஷயநோயைப் பற்றி ஆங்கில நிபுணர்களின் அபிப்பிராயமும் அவர்களின் சிகிச்சை முறையும் விரிவாக வர்ணிக்கப்பட்டு சுதேச வைத்யர்கள் முக்கியமாக இந்நோயில் கையாளும் மருந்துகளும் அதின் செய்முறைகளும் சொல்லப்பட்டுள்ளன. விலை அணா 8 தபால்கூலி வேறு.

விலாசம்:—**பண்டிட் நாராயணய்யங்கார்,**
கெ. 2, போலீஸ் ஸ்டேஷன் மேற்கு சந்து, மதுரை.

முதலில் வைத்தியனிடம் பேசுவதாக வைத்துக்கொள்ளுவோம் அதில் இருக்கும் எழுத்துக்களைக் கணக்கிட்டால் ஏழு ஆகின்றது. இதை மூன்றால் பெருக்கினல் 21 ஆகிறது. இதை எட்டால் வகுத்தால் ஐந்து மிச்சம் வருகிறது. இது ஒத்தப்படையாகும். 1, 3 5, 7, என்பன ஒத்தப்படையாகும். 2, 4, 6, 8 என்பன இரட்டைப் படையாகும்.) தூதன் சிகப்பு, சிகப்புகலந்த கருப்பு, அல்லது கருப்பு, நிறமுள்ள வஸ்திரத்தை உடுத்திக்கொண்டும், கையில் தடியுடனும், தலையில் சடையுடனும், மொட்டைத்தலையுடனும், எண்ணைஸ்நானம் செய்தும், பயத்தைக்கொடுக்கும் பேச்சுடனும். தூக்கத்துடனும், கண்ணீருடனும், சாம்பல், தணல், கபாலம், கயிறு, உலக்கை, இவைகளுடனும், அஸ்தமய சமயத்திலும், மனம் கலங்கியும், சூனியத்வனியுடனும் வந்தால் நோயாளிக்கு மரணம் சம்பவிக்கும். தூதன் நோயாளியின் ஜாதியைச்சேர்ந்தவனாகவும், வெளுப்பு வஸ்திரம் தரித்தும், கையில் திரவியத்துடனும், க்ஷத்திரியனாகவும் அல்லது பிராமணனாகவும், தாம்பூலம் போட்டுக்கொண்டும், கல்கடத்தைத்தூக்கியவனாகவும், சுபமான வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டும், வந்தால் ரோகம் குணமாகும். சந்தியாகாலங்களிலும், ராத்திரியிலும் வைத்தியன் ஸ்நானம் அல்லது போஜனம் செய்யும்பொழுதும், விபரீதகாலங்களிலும் (அதாவது வைத்தியனுடைய அசந்தர்ப்ப வேளைகளிலும்) வைத்தியனை அழைக்கப் போகலாகாது. வைத்யன் நோயாளியின் வீட்டில் தூங்கக்கூடாது. நோயாளியின் வீட்டில் வைத்யன் போஜனம் செய்யக்கூடாது. அழைக்கப்படாமல் வைத்யன் நோயாளியைப்பார்க்கக் கூடாது. நோயாளியிடம் மரணத்தைச் சொல்லக்கூடாது.

சகுனம்:—(குறிப்பு:—வைத்தியன் நோயாளியைப் பார்க்கச் செல்லும்பொழுது காணப்படும் சகுனங்களைக்கொண்டு மரணத்தையும் குணபாகத்தையும் அறிதல்) குடை, பசு அல்லது காளைமாடு. பிராமணக்கன்னிகை, மாமிசம், கள், தேவதாஸி, கோரோசனம், மங்களசாமான்கள், அரசன், குதிரை, யானை, தயிர், ஸ்தோத்திர பாடம் (கடவுள் வாழ்த்துப் பாட்டுக்கள்), சோக ரௌத்ர பயானக ரஸங்கள் கலக்காத பாட்டுக்கள், ஆகிய இவை எதிர்ப்படுமாகில்

சுபம். பாம்பு, பூனை, ஓணான், குரங்கு, கோதா, இவைகள் வழியை மறித்திடில் அசுபமாகும். ரோகியின் வீட்டின் வாயிலிலிருந்து மங்களம் வருமாகில் அதுவும் அசுபமே. ஆண் பெயருள்ளவைகள் இடது பக்கத்தில் போகுமாகில் சுபம். ஆனால் யானையும் பக்ஷியும் கூடாது. பெண்பெயருள்ளவைகள் வலதுபக்கத்தில் போகுமாகில் சுபம். ஆனால் நரியும் ச்யாமாவும் கூடாது. துர்கை, காக்கை, நாய், கோட்டான், கழுதை, நரி, ஆகிய இவை வெளிப்படும்பொழுது (வைத்தியன்) இடதுபக்கத்தில் இருந்தால் சுபம். பிரவேசிக்கும்போது (வைத்தியன்) இவைகள் வலதுபக்கத்தில் இருந்தால் சுபம்.

அஷ்டஸ்தான பரீக்ஷை:—நோயாளியின் எட்டு ஸ்தானங்களை வைத்தியன் பரீக்ஷிக்கவேண்டும். அவையாவன:—நாடி, மூத்திரம், மலம், நாக்கு, சப்தம், ஸ்பர்சம், கண், ஆகாரம், அதாவது உருவம் ஆகியவை. நாடி பரீக்ஷையால் தோஷப்பிரகோபங்களின் தாரதம்யம் தெளிவாகும். நோயின் ஆரம்பத்திலும் கழிவிலும் நாடிகளின் நிலைமையை நன்கு கவனிக்கவேண்டும். வீணையின் தந்திகம்பி ஒன்றாக இருந்தாலும் பல ஸ்வரபேதங்களைக் காட்டுவதுபோல கையிலுள்ள ஒரே நாடி சரீரத்திலுள்ள பல ரோகங்களைக் காட்டுகிறது. சகல நோய்களுக்கும் காரணம் தோஷப்பிரகோபமேயாகும் பலவித அஹிதசேவனத்தால் தோஷங்கள் பிரகோபத்தை யடைகின்றன. ஒரு ரோகம் மற்றொரு ரோகத்திற்கு நிதானம் அதாவது காரணமாகின்றது. முதலில் வைத்தியன் எல்லா ரோகங்களிலும் நாடி, நாக்கு, கண், மூத்திரம், இவைகளைப் பரீக்ஷிக்கவேண்டும். நன்றாகப் பரீக்ஷித்து பிறகு சிகித்சை செய்யவேண்டும். நாடி, மூத்திரம், நாக்கு, இவைகளின் லக்ஷணத்தை வைத்தியன் அறிந்து கொள்ளாமல் வைத்தியம் செய்தால் நோயாளிக்கு மரணம் சம்பவிப்பதுடன் வைத்தியனுக்கு நற்பெயரும் கிடைக்காது. நோயாளி வசிக்கும் தேசம், காலம், ரோகத்தின் பலாபலம், இவைகளை நன்கு அறிந்து சிகித்சை ஆரம்பித்தால் வைத்தியனுக்குப் பெரும் புகழும் உண்டாம்.

நாடிபரீக்ஷை:—வைத்யன் தன்வலதுகையின் விரல்களால் நோயாளியின் வலது கையில் கட்டைவிரலுக்குக்கீழ் போகும் நாடியை அழுத்திப்பார்க்கவேண்டும். நாடி பார்க்கும்பொழுது வைத்தியன் புத்தியை வேறிடத்தில் செலுத்தக்கூடாது. மனதில் சோக தாபத்துடன் நாடி பார்க்கக்கூடாது. அதிலேயே கவனம் செலுத்திப் பார்க்கவேண்டும். பெண்களுக்கு இடது கையில் நாடி நன்கு விளங்கும். புருடர்களுக்கு வலதுகையில் வியக்தமாகத்தெரியும். நோயாளியின் கையைச்சற்று வளைத்து விரல்கள் முழுதும் விரிந்திருக்கும்படி செய்து மேலும் நோயாளியின் கையைத் தடங்கலில்லாமல் அதாவது கையை ஊன்றிக்கொள்ளாமல் செய்து நோயாளியின் கட்டைவிரலுக்குக் கீழ்பாகத்தில் சற்று விலகிப்பார்க்கவேண்டும் விடியற்காலையில் நாடி பார்ப்பது உத்தமம். அல்லது உதயமாகி முதல்யாமத்தில் பார்க்கவேண்டும். நாடியை விரல்களால் அழுத்தி ஒருவிரல் விட்டு ஒரு விரலால் அழுத்தி இவ்விதம் மூன்று தடவை பார்க்கவேண்டும். நன்கு பரிசீலனை செய்து ரோகத்தை இன்ன ரோகமென்று அறியவேண்டும். மூன்று விரல்களால் அழுத்தி க்ரமமாகத்திரிதோஷங்களின் மந்தமத்யதீக்ஷ்ண கதிகளைத் தெரிந்துகொள்ளவேண்டும். வாதம், பித்தம், கபம், த்வந்த்வம், ஸந்நிபாதம், ஸாத்யம், அஸாத்யம், என்பனபோன்ற சூக்ஷ்மங்களனைத்தையும் நாடிகாட்டும். ஸ்நாயு, நாடி, ஹம்ஸீ, தமனீ, தரணீ, தரா, தந்துகீ, ஜீவனம், ஜ்ஞானம், என்ற இந்த பதங்கள் நாடியைப் பொருளாகச் சொல்லுபவை. ஸ்நானம் சாப்பாடு, அப்யங்கம், பசி, தாகம், மிகுதி தூக்கம், ஆகிய இக்காலங்களில் நாடிவிளங்காது. கட்டைவிரலுக்குக்கீழ் பாகத்திலுள்ள நாடிஉயிர்நிலைக்குச்சாக்ஷியாகும். அந்த நாடியின் கதியால் சரீரத்தின் ரோகநிலைமையையும் ஆரோக்ய நிலைமையையும் அறியலாம். கைகளில் நாடி பார்ப்பதுபோல கால்களிலும் நாடியை அறியலாம். சாஸ்திரம், ஸம்பிரதாயம், அனுபவம், ஆக இம்மூன்று வழிகளால் நாடியை அறியவேண்டும். ரத்ன பரீக்ஷைபோலவே நாடி பரீக்ஷைக்கும் விசேஷ அப்யாசம் அதாவது பயிற்சிவேண்டும். வாதநாடி பிரம்மாவாகும். பித்தநாடி சிவனாகும். சிலேஷ்மநாடி விஷ்ணுவாகும். ஆகவே திரிமூர்த்திகளும் நாடியில் அடைந்துள்ளார்கள். முதலில் வாதநாடி, பிறகு பித்த

நாடி, பிறகு சிலேஷ்மநாடி என அமைந்துள்ளது. ஸர்பம், அட்டை இவை முதலியவைகளின் நடையையொட்டி வாதநாடியும், காக்கை, லாவகம், மண்டூகம் (அதாவது தவக்களை) இவைகளின் நடையை யொட்டி பித்தநாடியும், ஹம்சம் அதாவது அன்னபக்ஷி, மயில், பாராவதம், கபோதம், கோழி, இவைகளின் நடையை யொட்டி கப நாடியும் நடக்கும். அடிக்கடி ஸர்ப்பநடைபோன்றும் மண்டூகநடை போன்றும் நாடி நடந்தால் அது வாத பித்தங்களைக்காட்டும். ஸர்ப்ப நடைபோன்றும் ஹம்ஸ நடைபோன்றும் மாறி மாறி நாடி நடந்தால் அது வாத கபங்களைக்காட்டும். ஸிம்ஹம் ஹம்ஸம் இவைகளின் நடைகளைப்போல் இருந்தால் அது பித்தச்லேஷ்ம நாடிநடையாகும். விறகு பிளப்பதுபோல வேகமாக நாடியிருக்குமாகில் அது ஸந்நிபாத நடையாகும். விருத்தஹாரீதர் என்பவர் கூறுகிறார்—ஒரே மாதிரியாக முப்பது தடவை (ஒரு க்ஷணத்தில்) நாடி நடையிருந்தால் நோய்குணமாகும். இல்லையேல் குணமாகாது. நின்று நின்று நாடி நடக்குமாகில் அது பிராணஹாநியைச்செய்யும். மிகமிக மெதுவாகவும், உறுதியில்லாமலும், இணரித்திணரியும், நின்று நின்றும், மெலிந்து மெலிந்தும், நாடி நடந்தால் அது ஸந்நிபாத லக்ஷணமாகும். அது மரணத்தைக்காட்டும். கழுத்தில் இடைவிடாமல் நாடி அடித்தாலும், விரல்கள் நுனியில் துடித்தாலும் அவ்விதமே. முதலில் பித்தநடையும் பிறகு வாத நடையும், பிறகு சிலேஷ்மநடையும் காட்டும் நாடி மரணத்தைக்குறிக்கும். சக்கரத்தில் சுழலுவது போல அடிக்கடி மாறிமாறிநடந்தும், மிகப்படபடப்புடன் நடந்தும், நிமிஷத்திற்குள் திடீரென்று நடை விழுந்தும், மயிரிழைபோல மெலிந்தும், இருக்கும் நாடி மரணத்தைக்காட்டும். ஆழ்ந்துபேசும் நாடி மாமிச வாஹிநீயாகும். (குறிப்பு—அதாவது சிலருக்குக் கட்டை விரல் அடியிலுள்ள நாடி மேலாகவும் சிலருக்கு ஆழ்ந்தும் இருக்கும்) ஜ்வரவேகத்தில் நாடி உஷ்ணத்துடனும் படபடத்தும் இருக்கும். காமக்ரோதங்களால் நாடி படபடப்புடன் இருக்கும். சிந்தை பயங்களால் மெலிந்து இருக்கும். மந்தாக்னி, தாதுக்ஷயம், இவைகளில் நாடி மிக மந்தமாக இருக்கும்ஆமரோகத்தில் நாடி நிறைந்தும், உஷ்ணமாயும், கனத்தும் இருக்கும். அக்னிபலமுள்ளவர்களுக்கு நாடி இலேசாகவும் வேகத்துடனும் நடக்கும் பசிகாலத்தில் உறுதி

யில்லாமலும், நன்றாகச்சாப்பிட்ட பிறகு உறுதியாகவும் இருக்கும். டமருகம்போன்ற நாடி ஒரே நாளில் மரணத்தை விளைவிக்கும். (குறிப்பு—டமருகம் என்பது ஓர் வாத்தியம்) நாடி நடுக்கத்துடன் நடந்தால், அது அசாத்தியக்குறியாகும். மின்னல்போல் உறுதியாகத்தோன்றி மறைந்தால் மறுநாள் பிராணஹானியை விளைவிக்கும். நாடி சீக்கிரமாகவாவது அல்லது குளிர்ந்தாவது காணப்படில் மரணத்தை விளைவிக்கும். ஆரம்பத்தில் நாடி தீவிரமாக அடித்து குளிர்ந்து அடிக்குமாகில் மரணமே. இதோடு வியர்வையும் பசையுடன் இருக்குமாகில் ஏழு நாட்களில் மரணம் சம்பவிக்கும். சரீரம் சில்லிட்டும், சுவாசம்கண்டும், நாடி தீவிரமாகவும் உஷ்ணமாகவும் காணப்படில் 15 நாட்களில் மரணம் சம்பவிக்கும். ஆரம்பத்தில் நாடி புலப்படாமலும் நடுவில் குளிர்ந்தும், சரீரத்தில் ஆயாசமும், கடைசியில் நாடி மந்தமாகவும் காணப்படில் மூன்று நாட்களில் மரணம் சம்பவிக்கும். மிக சூக்ஷ்மமாகவும் அதிவேகமாகவும் குளிர்ந்தும் நாடி காணப்படுமாகில் மரணமே. நாடி அறங்கி மின்னல்போல் புலப்பட்டு மறைந்தால் மரணமே. நாடி ஸர்ப்ப நடையுடன் குறுக்காக ஓடி உஷ்ணமாகவும் மிகவும் வேகத்துடன் நடந்தால் மரணமே. காலில் நாடி காணப்பட்டு கைகளில் காணப்படாமல் நோயாளியின் வாய்திறந்தால் மரணமே. திரிதோஷங்களையும் காட்டும் நாடி மரணத்தை விளைவிக்கும். குளிர்ந்தும் கோணலுமான நடையுடன் வாதஜ்வரங்களில் நாடி காணப்படும். ருஜுவாகவும் வேகத்துடனும் நீண்டும் பித்தஜ்வரங்களில் நாடி காணப்படும். மந்தமாகவும் உறுதியாகவும் குளிர்ந்தும் வழவழப்பாகவும் கபஜ்வரங்களில் நாடி நடக்கும். கோணலாகவும் கடினமாகவும் வாதபித்தஜ்வரங்களில் நாடி காணப்படும். விளக்கமாகவும் மந்தமாகவும் வாத கபஜ்வரங்களில் நாடி நடக்கும். சூக்ஷ்மமாகவும் குளிர்ந்தும் உறுதியாகவும் பித்தஜ்வரங்களில் காணப்படும். ஹம்ஸநடை, யானை நடை, போன்ற நடையுடன் நாடி இருந்து நோயாளியின் முகமும் தெளிவாக இருந்தால் ஆரோக்யமே. நோயாளியின் கையைத்தொட்டு நாடிபார்த்து விட்டு வைத்யன் தன் கைகளைக் கழுவினால் சேறு விலகுவதுபோல நோய்கள் வைத்தியனை ஒட்டாமல் விலகும்.

மூத்திர பரீக்ஷை:—இனி மூத்திர பரீக்ஷையைச் சொல்லுவோம். மூத்திர பரீக்ஷையால் வியாதி லக்ஷணம் புலப்பட்டுவிடுகின்றது. இரவின் கடைசி யாமத்தில் அதாவது விடிய நான்கு நாழிகைகளுக்குள் நோயாளியை எழுப்பி மூத்திரத்தை ஓர் காசக் குப்பி அல்லது சுத்தமான சீசாவில் பிடித்து பத்திரப்படுத்தி பிறகு சூரியோதய காலத்தில் பரீக்ஷைசெய்யவேண்டும். நோயாளியின் மூத்திரத்தைப்பிடிக்கும் பொழுதுமுதல் மூத்திரத்தைக்கொஞ்சம் தள்ளிவிட்டு நடு மூத்திரத்தை எடுத்துக்கொள்ளவேண்டும். வாத நோயில் மூத்திரம் வெளுப்பாகவும், கபநோய்களில் நுரையுடனும், பித்தநோய்களில் சிகப்பு வர்ணத்துடனும், துவந்துவ நோய்களில் கலந்து லக்ஷணங்களுடனும், ஸந்நிபாதத்தில் கறுப்பு நிறத்துடனும் மூத்திரம் இருக்கும். நோயாளியின் முன்சொன்ன மூத்திரத்தை ஓர் கிண்ணியில்விட்டு அதில் நல்லெண்ணெ ஓர் சொட்டுவிடவேண்டும். அந்த நல்லெண்ணெ உடனே மூத்திரத்தில் பரவுமாகில் நோய் குணமாகும். பரவாவிடில் வியாதி கடின ஸாத்யம். கிண்ணத்தில் அடிக்குப்போகுமாகில் அஸாத்யம். இது நாகார்ஜுனன் என்பவர் கூறுவதாகும். சர்படம் என்ற நூல் கூறுவதாவது—வாதப்பிரகோபத்தில் மூத்திரம் நீலநிறமாகவும் எண்ணெப்பசையற்றும், ரக்தப் பிரகோபத்தில் மஞ்சள் அல்லது சிகப்பு நிறமாகவும் தைலம் போன்றும், கபப்பிரகோபத்தில் தளத்தின் நீர்போலவும் எண்ணெப்பசையுடனும், ரக்தப்பிரகோபத்தில் எண்ணெப்பசையுடனும் உஷ்ணமாகவும் சிகப்பாகவும் இருக்கும். ஆஹார பாகம் இல்லாதவர்களுக்கு மூத்திரம் மாதளை ரஸம்போன்றும், வெளுப்பு அந்சகக்கல் நிறம் போலவும், ஜலம்போலவும், அல்லது சந்தனம்போன்றும் இருக்கும். அஜீர்ண ரோகங்களில் மூத்திரம் கழுநீர்போன்றும், ஆமபக்காய்ச்சலில் அழுக்கடைந்த நிறத்துடனும் மிகமிஞ்சியும், இருக்கும். வாதபித்த ரோகங்களில் அழுக்கடைந்த ஜலம் போன்றும் உஷ்ணமாகவும், வாதகபரோகங்களில் வெளுப்பாகவும் நீர்க்குமிழிபோன்றும், பித்தகபரோகங்களில் கலக்கமாகவும் அல்பரக்தத்துடனும், பழைய காய்ச்சல்களில் ரக்தம்போன்றும் அல்லது மஞ்சளாகவும், ஸந்நிபாத நோய்களில் கலந்தலக்ஷணங்களுடனும் இருக்கும். மூத்திரத்தில் விடப்பட்ட தைலபிந்து கிழக்கு திக்கில் பரவினால் சீக்கி

ரம் ஆரோக்கியமும், தெற்கு திக்கில் பரவினால் கிரமமாக ஆரோக்யமும், வடக்குதிக்கில் நிச்சயமான ஆரோக்யமும், மேற்கு திக்கில் சுகமும் ஆரோக்யமும், வடகிழக்கில் ஒரு மாதத்தில் மரணமும், தென்கிழக்கில் ஒரு மாதத்தில், மரணமும், தென்மேற்கில் சிலகாலம் கஷ்டமடைந்து பிறகு மரணமும், வடமேற்கில் நிச்சயமான மரணமும் சம்பவிக்கும். மூத்திரத்தில் விடப்பட்ட தைலபிந்து அதில் பரவும்பொழுது கலப்பைபோன்றும், ஆமைபோன்றும், பசுபோன்றும், கரண்டம் அதாவது ஓர் வகைச்சிமிழ்போன்றும், வட்டமாகவும், முண்டம்போலும், அவயவத் துண்டுபோன்றும், ஆயுதம் போன்றும், கத்திபோன்றும், உலக்கைபோன்றும், பட்டாக்கத்தி போன்றும், அம்புபோன்றும், குட்டைத்தடிபோன்றும், நான்கு அல்லது மூன்று வீதிகள் சந்திக்குமிடம் போன்றும், காணப்படுமாகில் நோயாளிக்கு மரணம் சம்பவிக்கும். ஹம்ஸம், சக்ரவாகம், குளம், தாமரைப்பூ, யானை, சாமரம், குடை, தோரணம், உப்பரிக்கை, இவைகள்போன்றும் காணப்படுமாகில் ஆரோக்யமுண்டாகும். மூத்திரத்தில் விடப்பட்ட தைலபிந்து சல்லடைபோல காணப்படுமாகில், குலதோஷத்தால் அந்நோய் உண்டானதாக அறியவேண்டும். அதிலும் பிரேததோஷத்தால் உண்டானதாக அறியவேண்டும். அந்த தைலபிந்து மனிதன்போலவோ அல்லது இரு தலைகள் போலவோ காணப்பட்டால் பூததோஷத்தால் அந்நோய் உண்டானதாகக்கூறவேண்டும். அந்நோயில் பூதவித்யையை உபயோகிக்க வேண்டும். மஞ்சிஷ்டி நிறமாகவும், அழுக்கடைந்த நிறமாகவும், நீலநிறமாகவும், எண்ணெப்பசையுடனும், ஜலம்போன்றும், குளிர்ந்தும் இவ்விதம் மூத்திரம் காணப்படுமாதலால் இந்த பேதங்களைக் கவனித்துத் தக்கபடி சிகித்சை செய்யவேண்டும். வாதப்பிரகோபத்தால் ஷை தைலபிந்து ஸர்ப்பம்போன்றும், பித்தத்தால் குடை போன்றும், கபத்தால் முத்துபோன்றும் காணப்படும் என்று சிலர் சொல்லுவார்கள்.

மலபரீக்ஷை:—ருத்ரதந்திரம் என்ற நூலில் கூறுவதாவது—மலம் கெட்டியாகவும் உலர்ந்தும் இருந்தால் அது வாதப்பிரகோபமாகும். மலம் மஞ்சள்நிறமாகவிருந்தால் அது பித்தப்பிரகோப

மாகும். மலம் வெளுப்பாகவிருந்தால் அது கபப்பிரகோபமாகும். ஸந்நிபாதத்தில் எல்லா லக்ஷணங்களும் கலந்து இருக்கும். மலம் துண்டுதுண்டாகவும் நுரையுடனும் பசையற்றும் அழுக்கடைந்தும் வாதப்பிரகோபத்தால் காணப்படும். வாதகபப்பிரகோபத்தால் மலம் அழுக்கடைந்த வெண்மையுடன் இருக்கும். வாதபித்த பிரகோபத்தால் மலம் ஒன்றுசேர்ந்தும் துண்டுதுண்டாகவும் மஞ்சள்கலந்த கறுப்புநிறமாகவும் இருக்கும். கபபித்தப் பிரகோபத்தால் மஞ்சள் கலந்த கறுப்பு நிறத்துடனும் கொஞ்சம் ஒன்றுபட்டும் வழவழப்பாகவும் இருக்கும், ஸந்நிபாதத்தால் மலம் கறுப்பாகவும் அல்லது மஞ்சளாகவும் துண்டுதுண்டாகவும் அல்லது வெளுப்பாகவும் இருக்கும். மலம் குளிர்ந்தும் துர்கந்தமுமாக இருந்தால் ஜீர்ணமானதாகக் கருதவேண்டும். கறுப்பும் மஞ்சளும் கலந்த நிறத்துடனும் கோழியாகவும் மலம் இருந்தால் மலக்குறைவு காரணமாகும். மலம் வெளுப்பாகவும் மிகுந்தும் மிகவும் துர்நாற்றத்துடனும் மஹோதரத்தில் காணப்படும். க்ஷயரோகத்தில் மலம் கறுப்பாகவிருக்கும். ஆமரோகத்தில் இடுப்புவலியுடனும் மஞ்சள் நிறமாகவும் இருக்கும். மலம் மிகக்கறுப்பாகவும் அதிவெளுப்பாகவும் மிகச்சிகப்பாகவும் அல்லது மிகமஞ்சளாகவும் காணப்படில் மரணக்குறியாகும். மிகுந்த உஷ்ணத்துடன், மலம் இருந்தால் நிச்சயமாக மரணத்தை விளைவிக்கும். வேறு நூலில் காணப்படுவதாவது—வாதத்தால் மலம் கறுத்தும், பித்தத்தால் மஞ்சள் நிறமாகவும், கபத்தால் மலம் வெளுத்தும் இருக்கும். ஆமதோஷத்தால் மலம் வெளுப்பாகவும், திரிதோஷங்களால் கலந்த நிறமுள்ளதாகவும் இருக்கும். அஜீர்ணத்தால் மலம் பக்வமாகாமலும், ஜீர்ணமாகில் மலம் பக்வமாகவும் இருக்கும். அத்யக்னி ரோகத்தில் அதாவது மிதமிஞ்சிய பசி என்ற ரோகத்தில் மலம் கெட்டியாகவும் உலர்ந்தும் இருக்கும். மந்தாக்னி ரோகத்தில் மலம் இளகிப்போகும். மலம் துர்கந்தமாகவும் மயில்தோகையின் கண்கள் போன்ற கண்களுடனும் காணப்படில் அது அசாத்தியக்குறியாகும்.

சப்த பரீக்ஷை:—கனத்த த்வனி கபப்பிரகோபத்தாலும், தெளிவானபேச்சு பித்தப்பிரகோபத்தாலும், இந்த இரண்டும் இல்லாமலிருப்பது வாதப்பிரகோபத்தாலும் என்று கொள்ளவேண்டும்.

ஸ்பர்ச பரீக்ஷை:—பித்தநோயுள்ளவன் சரீரம் உஷ்ணமாக விருக்கும். வாதநோயுள்ளவன் சரீரம் குளிர்ந்திருக்கும். ஜலத்தால் நனைந்திருப்பதுபோன்றநிலை கபப்பிரகோபத்தால்காணப்படும்.

ரூப பரீக்ஷை:—மிக விரிவாகவும், சீக்கிரமாக மரணத்தை விளைவிப்பதாலும், மிகுந்த பலமுள்ளதாகையாலும், மற்றவைகளையும் பிரகோபமடையச்செய்வதாலும், ஸ்வதந்திரமானதாலும், பல நோய்களை விளைவிப்பதாலும், மற்றவைகளைவிட வாதமே பிரபலமானதாகும். வாதப்பிரகிருதிகளான மனிதர்கள் குற்றமுள்ளவர்களாகவும் அழுக்கடைந்தும் வெடிப்புமுள்ள கூந்தல், சரீரம், இவைகளையுடையவர்களாகவும் குளிர்ச்சியில் வெறுப்புள்ளவர்களாகவும் உறுதியற்ற தைர்யம் நினைவு புத்தி அன்பு பார்வை நடை இவைகளையுடையவர்களாகவும் மிகுந்த ஹாட்டையடிப்பவர்களாகவும் இருப்பார்கள். பித்தமே அக்னியெனப்படும். அல்லது அக்னியில் உண்டானதாகக் கருதப்படலாகும். பித்தம் மிகுந்த பிரகிருதிகளான மனிதர்கள் பசி தாகம் மிகுந்தும் மஞ்சளாகவும் உஷ்ணமுமான சரீரமுடையவர்களாகவும் சிவந்தகைகால் முகமுள்ளவர்களாகவும் சூரர்களாகவும் மானமுள்ளவர்களாகவும் செம்மட்டை மயிருள்ளவர்களாகவும் குறைந்த ரோமங்களுடனும் இருப்பார்கள். கபம் என்பது குளிர்ந்த வஸ்துவாகும். கபம் மிகுந்த பிரகிருதியுள்ள மனிதன் சௌம்யனாகவும் நன்றாக மறைந்து பொருந்தின ஸந்தி, அஸ்தி, மாமிசம், இவைகளையுடையவனாகவும், பசி, தாகம், சோகம், கிலேசம், ஆகிய இக்காரணங்களால் கலக்கடையாதவனாகவும் புத்திமானாகவும் ஸத்வகுணம் அமைந்தவனாகவும் சொல் மாறாதவனாகவும் இருப்பான்.

கண்பரீக்ஷை:—வாதநோயில் கண்வரண்டும், அழுக்கடைந்தும் விகாரமாகவும், ஸ்திரமற்றதாகவும் உள் எரிச்சலுடனும் இருக்கும். பித்தநோயில் தீபவொளியை வெறுத்தும் எரிச்சலுடனும் மஞ்சள் நிறமாகவும் இருக்கும். கபநோயில் ஜலம் கசிந்துகொண்டும் பார்வை மங்கியும் பசையுடனும் சுறுசுறுப்பின்றியும் இருக்கும். துவந்துவநோய்களில் கண்கள் கலந்த லக்ஷணமுள்ளவைகளாக

அடிக்கடி மாறும். ஸந்நிபாதத்தால் கண்கள் கருப்பு நிறத்துடனும் உள்ளே சென்றும் சோம்பல் ஞாபக மறதியுடனும் விகாரமாகவும் சிவந்த நிறத்துடனும் இருக்கும். ஒருகண் விகாரமாகவும் ஒரு கண்மூடியும் இருந்தால் மூன்று நாட்களுள் மரணத்தைக் குறிக்கும் நோயாளிக்குத் திடீரென பார்வை மறைந்தால் மரணம் சம்பவிக்கும். விழி சற்று கருப்பாக விருந்தாலும் சிகப்பாகவிருந்தாலும் விகாரப்பார்வையுடன் இருந்தாலும் மரணமே. ஒரே பார்வையுடன் ஞாபகமில்லாமல் நோயாளி புரண்டுகொண்டு மலர்ந்த விழியுடன் காணப்படில் ஒரேநாளில் மரணம் சம்பவிக்கும். யாமலம் என்ற நூல் கூறுவதாவது —வாய் உலர்ந்து அடிவயிறு கருத்து, பற்கள் கருத்து, மூக்கின்நுனி குளிர்ந்து, கண் சிவந்து ,ஒரே பார்வையாக, கைகால் களைப்புரட்டிக்கொண்டு காது செவிடாகி, மூச்சுக்காற்று குளிர்ந்து அல்லது உஷ்ணமாகி, சரீரம் ஜில்லிட்டு, நடுக்கம்கண்டு, பயத்துடன்உலகம் மறந்தும், நோயாளி காணப்படில் மரணம் சம்பவிக்கும்.

வாய் பரீக்ஷை: —வாதநோயில் வாய் தித்தித்தும், பித்தநோயில் காரமாகவும், கபநோயில் தித்தித்தும் அல்லது புளித்தும் ஸந்நிபாதத்தில் கலந்த லக்ஷணத்துடனும், அஜீர்ணரோகத்தில் நெய் பூசியதுபோலவும், அக்னிமந்த ரோகத்தில் துவர்ப்பாகவும் இருக்கும்.

நாக்கின் பரீக்ஷை: —வாதநோயில் நாக்கு குளிர்ந்தும் சுரசுரப்பாகவும் வெடித்தும் இருக்கும். பித்தநோயில் நாக்கு சிவந்தும் அல்லது கருத்தும் கபநோயில் வெளுத்தும் வழுவழுப்பாகவும் இருக்கும். ஸந்நிபாதத்தில் கறுத்தும் முள் உள்ளதாகவும் உலர்ந்தும் துவந்துவ நோய்களில் கலந்த லக்ஷணமுள்ளதாகவும் இருக்கும்.

காலஞானம்: —மேகம், சமுத்திரஜலம், பூர்ணசந்திரன், சூரியன், கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு, இவைகளில் பள்ளம் அல்லது சந்து இருப்பதாகத்தோன்றினல் பத்துநாளில் மரணமும், இவைகளில் புகையுருவத்தைப்பார்க்கில் ஐந்தாவது நாளில் மரணமும், இவைகளில் அக்னிஜ்வாலையைக் காண்கில் உடனே மரணமும்

சம்பவிக்கும். அருந்ததி, துருவன், விஷ்ணுபாதம், மாத்ருமண்டலம் இவைகளில் ஏதாவது ஒன்று கண்களுக்குப் புலப்படாவிட்டால் மரணமே. நாக்கு அருந்ததியாகும். மூக்கின் நுனி துருவன் ஆகும். இரண்டு புருவங்களுக்கும் நடுமையம் விஷ்ணுபாதமாகும். இரண்டு புருவங்களும் மாத்ரு மண்டலமாகும். ஆகவே மனிதன் தன்னுடைய மூக்கின் நுனி, இரண்டு புருவங்கள், நாக்கு, புருவமத்தி, இவைகளைக்காண முடியாவிட்டால் மரணம். மனிதன் தன் இரு காதுகளையும் இரு கைகளால் அடைத்துக்கொண்டு அச்சமயத்தில் காதுகளுக்குள் ஓர் வித சப்தத்தை உணராவிட்டால் மரணம் சம்பவிக்கும். புருவம் தெரியாவிட்டால் ஒன்பது நாட்களிலும் புருவமத்தி தெரியாவிட்டால் ஐந்து நாட்களிலும், காதுகளில் சப்தம் கேட்க்காவிட்டால் ஏழு நாட்களிலும், மூக்கின் நுனி தெரியாவிட்டால் மூன்று நாட்களிலும், நாக்கு தெரியாவிட்டால் ஓரே நாளிலும் மரணம் சம்பவிக்கும். மனிதன் திடீரெனப்பெருத்தாலும், திடீரென இளைத்தாலும், திடீரென வேறுபாடு உண்டானாலும் ஆறுமாதங்களில் மரணம் நேரும். நாக்கு கருத்தும், முகம் குங்குமநிறமாகவும, நாக்கு சுரசுரப்புடனும், இருந்தால் மரணக்குறியாகும் நோயாளி குளிரால் பீடிக்கப்பட்டு வழவழப்பான வியர்வையுடனும் இருந்து நெற்றியில் பனிபோல் குளிர்ந்த வியர்வை கண்டு வாயில்போட்ட ஆஹாரம் உள்ளுக்குச் செல்லாவிட்டால் மரணமே. ராத்திரியில் உடம்பு எரிச்சலும் பகலில் உடம்புகுளிர்ந்தும் தொண்டையில் கபமும் ருசியற்றவாயும் குங்குமம் போன்று சிவந்த கண்களும் கருப்பான நாக்கும் பெருத்தும் சிறுத்துமுள்ள நாடி நடையும் மரணக்குறிகளாகும். விகாரமற்ற பார்வையும் ஸ்பஷ்டமான பேச்சும் சூடுள்ள கைகால்களும் சாதாரண எரிச்சலும் சுவையுடன் கூடிய வாயும் மிருதுவான நாக்கும் நிதானமான மூச்சும் வியர்வையற்றும் காய்ச்சலில் காணப்படில் அது சாத்தியமாகும்.

**தேசங்கள்:**—நீர், மரம், குன்று, இவைகள் குறைந்துள்ள தேசம் ஜாங்கலமெனப்படும். அங்கு நோய் அல்பமாக இருக்கும். நீர், மரம், குன்று, இவைகள் நிறைந்துள்ள பிரதேசம் அனூப

மெனப்படும். இங்கு நோய் அதிகமாக இருக்கும். இரண்டு லக்ஷணங்களும் நிற்கியிருந்தால் அது ஸமதேசமெனப்படும். ஜாங்கல தேசம் வாதம் மிகுந்திருக்கும். அனூபதேசம் கபம் மிகுந்திருக்கும். ஸமதேசம் ஸமதோஷமாக விருக்கும். வேறுநூல் கூறுவதாவது—நீர் மிகுந்து விருக்ஷங்கள் மிகுந்துள்ளதேசம் அனூபமெனப்படும். இங்கு வாத கபநோய்கள் மிகுந்திருக்கும். நீர், விருக்ஷங்கள், ஆகிய இவைகள் குறைந்துள்ளபிரதேசம் ஜாங்கலமெனப்படும். இங்கு பித்தம், ரக்தம், இவைகளால் உண்டாகும் நோய்கள் மிகுந்திருக்கும். இரண்டு லக்ஷணங்களும் மிதமாக இருக்கும் பிரதேசம் ஸமதேசமெனப்படும்.

**திரிதோஷப் பிரகோபகாலம்:**-மார்கழி, தை, மாசி, ஆடி, ஆவணி புரட்டாசி. இந்த மாதங்களில் வாயு ராஜாவாகும். ஐப்பசி, கார்த்திகை, வைகாசி, ஆனி; இம்மாதங்களில் பித்தம் அரசனாகும். பங்குனி, சித்திரை, இவைகளில் பிராணிகளுக்குப் பீடையைச்செய்யக் கூடிய கபம் அரசனாகும்.

**தோஷோத்பத்தி காலம்:**—ஹேமந்தம், வர்ஷாகாலம், சிசிரருது இவைகளில் வாயுவும், சரத், கிரீஷ்மம், இவைகளில் பித்தமும் வஸந்தத்தில் கபமும் பிரகோபமடையும், அவைகளுக்குத் தகுந்த சிகிச்சை செய்யவேண்டும்.

**திரிதோஷப் ப்ரகோபம்:**—மல மூத்திரங்களை அடக்குதல், ஆகாரம் பூர்ணமாகச் சாப்பிட்டவுடன் மறுபடியும் ஆஹாரம் புசித்தல் ஜாக்கிரி விழித்தல், உரத்த சப்தமிடுதல், அதிக தேகப்பயிற்சிசெய்தல், அதிகமாகவாஹநங்களில் சவாரிசெய்தல், கசப்பு, துவர்ப்பு பசையற்றதுமான ஆஹாரங்களைப் புசித்தல், மிகுந்த ஆலோசனை, புணர்ச்சி, பயம், உபவாஸம், குளிர்ச்சி, சோகம், மழைகாலம், ஆகிய இவைகளால் வாதம் பிரகோபமடைகின்றது. காரம், புளிப்பு, மத்ய வகைகள், உப்பு, உஷ்ணம், விதாஹிவஸ்துக்கள் அதாவது மாவு பண்டம் போன்றவைகள், தீக்ஷ்ணவஸ்துக்கள் அதாவது மிளகு போன்றவைகள், கோபம், வெய்யில், நெருப்பு, பயம், சிரமம், உலர்ந்த காய்கறிகள், க்ஷாரவகைக்கள், அஜீர்ணம், விஷமாசனம் அதா

வது அகாலத்தில் அதிகமாகவோ குறைந்தோ சாப்பிடும் ஆகாரம், சரத்காலம் ஆகிய இவைகளால் பித்தம் பிரகோபமடைகின்றது. பகல்தூக்கம், தித்திப்பு, குளிர்ந்தவஸ்து, மீன், குருவஸ்து, புளிப்பு வழுவழுப்பான வஸ்து, எள், கரும்பு, பாலால் தயாரிக்கப்பட்ட வஸ்து, மிகச்சாப்பாடு, உப்பு, மிகுந்த நீர் குடித்தல், வசந்தகாலம், இவைகளால் கபம் பிரகோபமடைகின்றது.

**திரிதோஷங்களின் தொழில்:**—சுரசுரப்பு, சுருங்குதல், சவுக்கால் அடிப்பதுபோன்றவலி, வலி, கறுப்புகலந்த சிகப்பு நிறம், ஓடுதல், (இந்திரியங்களின்) தொழில், மரத்துப்போதல், குளிர்ச்சி, கரடுமுரடாதல், உலருதல், ஆகிய இவை வாயுவின் தொழிலாம். ஆயாஸம், வியர்வை, புளித்த ஏப்பம், சிகப்பு நிறம், துர்நாற்றம், நைந்துபோதல், கொதித்துப்போதல், பிதற்றல், மூர்ச்சை, கிறுகிறுப்பு, எரிச்சல், ஆகிய இவை பித்தத்தின் தொழிலாம். வெண்மை, குளிர்ச்சி, கனத்தல், தினவு, பசை, பூசுதல் புதிய வஸ்துக்கள் குழாய்களின் சுவர்களில் பூசிக்கொள்ளுதல், விறைத்துப்போதல், உயருதல், நஞ்சுபோதல், காமதம், ஆகியஇவைகபத்தின்தொழிலாம்.

**திரிதோஷங்களின் சமனம்:**—எண்ணெய்ப்பசையுள்ளதும் உஷ்ணமாயும் உறுதியானதும் தாதுபுஷ்டியை உண்டுபண்ணக்கூடியதும் உப்பாகவும் தித்திப்பாகவும் புளிப்பாகவும் உள்ள வஸ்துக்கள், எண்ணெய், வெய்யில், ஸ்நாநம், அப்யங்கம், பஸ்தி, மாம்ச வகைகள் சாராயம், உடம்பு பிடித்தல், தேய்த்தல், ஸ்நேஹம் அதாவது கிருதபானம், செய்தல், ஸ்வேதம் அதாவது வியர்வை உண்டுபண்ணுதல் நிரூஹம் என்ற பஸ்தி, நஸ்யம், நித்திரை, மருந்து வைத்துக்கட்டுதல், ஆகிய இவை வாதப்பிரகோபத்தை சமனம் செய்யும். கசப்பு, தித்திப்பு, துவர்ப்பு, குளிர்ச்சி, காற்று, நிழல், இரவு, விசிறிகொண்டு வீசுதல், நிலவு, நிலவறை, நீர் யந்திரம், தாமரை, நெய், பால், பேதிக்குக்கொடுத்தல், ஸ்நாநம், ரக்தத்தை வெளிப்படுத்தல், மருந்துவைத்துக்கட்டுதல், ஆகிய இவைகளால் பித்தப்பிரகோபம் தணிகும், வரட்சியான வஸ்து, துவர்ப்பு, க்ஷாரம், கசப்பு, காரம், தேகப்

பயிற்சி, வாந்தி, வழிநடத்தல், மல்யுத்தம், விழிப்பு, ஜலக்ரீடை, காலால் மிதித்தல், புகை, உஷ்ணம், சிரோவிரேகம், ஸ்வேதம், மருந்துகளை வைத்துக்கட்டுதல், ஆகிய இவைகளால் கபப்பிரகோபம் சமிக்கும். வேறு நூல் கூறுவதாவது—துர்ஜனங்களை அதாவது மூர்க்கனை அடக்குவதுபோல தீக்ஷணமான காரியத்தால் கபத்தை ஜயிக்கவேண்டும். (அதாவது மூர்க்கனை நாம் அடக்கவேண்டுமானால் மிருதுவான காரியங்களால் அடக்க முடியாது. தீக்ஷ்ணமான காரியங்கள் அதாவது கடினமான பேச்சுகள், அடி, முதலியவைகளால்தான் அடக்கமுடியும். அதுபோல கபப்பிரகோபத்தில் தீக்ஷ்ணம் அதாவது மிளகு போன்ற வஸ்துக்கள் முதலியவைகளால் சிகித்சை செய்தால் கபம் தணியும் என்பது பொருள்) சிநேகிதனை நல்வழிக்கு கொண்டுவருவதற்கு ஸ்நேஹம் உபாயமாகும். அதுபோல வாதத்தை ஸ்நேஹத்தால் அதாவது கிருதபானம் முதலியவைகளால் சமனப்படுத்தவேண்டும். மாப்பிள்ளைகளுக்குப் போல மதுர வஸ்துக்களாலும் சீதள வஸ்துக்களாலும் பித்தப்பிரகோபத்தில் சிகித்சை செய்யவேண்டும். கபப்பிரகோபத்தில் வமனமும் நஸ்யமும், பித்தப்பிரகோபத்தில் விரேசனமும், வாதப்பிரகோபத்தில் பஸ்தியும், த்வந்துவப்பிரகோபங்களில் இவைகள்கலந்தும் பிரதான சிகித்சையாம்.

இரவு பகல்களில் திரிதோஷப் பிரகோபம்:—பெரும்பாலும் முற்பகலிலும் முன் ராத்திரியிலும் கபம் விருத்தியடையும். பெரும்பாலும் நடுப்பகலிலும் நடு இரவிலும் பித்தம் விருத்தியடையும், சாயங்காலத்திலும் விடியற்காலத்திலும் வாதம் விருத்தியடையும்.

வியாதியின் ஆமநிலைமையின் குறி:- சோம்பல், உத்ஸாஹக் குறைவு, ஹிருதயம் சுத்தமாகவில்லாமலிருத்தல், தோஷங்களின் விருத்தி, மூத்திரம் சுத்தமாக இல்லாமலிருத்தல், வயிற்றின் கனம், அரோசகம், ஜீரணக்குறைவு, ஆகிய இந்த லக்ஷணம் காணப்படுமாகில் வியாதி ஆமநிலைமையிலிருப்பதாக அறியவேண்டும்.

அதன் பரிஹாரம்:—உபவாஸம், சுடுகஞ்சி, இலகுவான ஆகாவரட்டி, ஆகாரம், கசப்பு ருசியுள்ள கஞ்சி, பஸ்தி, ஸ்வேதம்

பாசனம், வமனம், விரேசனம், ஆகிய இவை தனித்தோ அல்லது சேர்த்தோ ஆமநிலைமைக்குப் பரிஹாரமாகும்.

**வயது:**—16 வயதுவரையில் பாலன், எழுபது வயதுவரையில் மத்யம், அதற்குமேல் விருத்தாப்பியம்.

**பிரகிருதி:**—வாதப்பிரகிருதியான மனிதன் லக்ஷணங்களாவன—தைரியமற்றும், நிலையற்ற அன்பு, நன்றிமறத்தல், மெலிந்தும் பசையற்றும், சரீரத்தின் வெளிப்பக்கங்களில் பார்வைக்கு நரம்புக்குழாய்கள் மிகுந்தும், மிகுந்தஹரட்டையும், வேகமான நடையும், திரியும் ஸ்வபாவமும், நிலையற்ற மனதுடனும், தூக்கத்தில் ஆகாசத்தில் பறந்துபோவது போன்ற நினைவும், நிலையற்ற பார்வையும், ஐசுவரியம் நண்பர்கள் இவை குறைந்தும், இருக்கும். பித்தப்பிரகிருதியான மனிதன் லக்ஷணங்களாவன—மிகுந்த புத்தியும், கூர்மையுத்தியும், சாதுர்யமான பேச்சும், பராக்ரமமும், யுத்தகளத்தில் நிகரற்றும், தூக்கத்தில் தங்கம், புரசம்பூ: கர்ணிகாரம், அக்னி, மின்னல், இவைகளைக் கனவில் கண்டும், எவரையும் பயத்தால் வணங்காமலும், விரோதிகளிடத்தில கடினமாகவும், நல்வார்த்தை. தானம் இவைகளைச்செய்தும், நடை தளர்ந்தும இருக்கும். கபப்பிரகிருதியான மனிதன் லக்ஷணங்களாவன—வெளுத்த கண்களும், நிலைத்தும் வண்டுகள் போன்று கருத்துமுள்ள கூந்தலும், ஐசுவரியமும், மிருதங்கம்போன்ற தவனியும், தூக்கத்தில் தாமரை, அன்னபக்ஷி, சக்ரவாகம், குளங்கள், இவைகளைக் கனவில் காண்பதும், கடைக்கண் சிவந்தும், உருண்டு திரண்ட உறுப்புகளும், பசையுடன் கூடிய நிறமும், ஸத்வகுணம் மிகுந்தும், கஷ்டங்களை ஸஹித்தும், பெரியோர்களை மதித்தும், இருக்கும். த்வந்த்வப்பிரகிருதிகளில் இரண்டு லக்ஷணங்களும் கலந்திருக்கும். ஸந்நிபாதப்பிரகிருதியில் மூன்று லக்ஷணங்களும் கலந்திருக்கும். விஷத்தில் உண்டான கிருமியை அந்த விஷத்தால் மரணமடைவதில்லை. அதுபோல முன் சொன்ன பிரகிருதிகள் மனிதனைப் பாதிப்பதில்லை.

**ஆரோக்ய லக்ஷணம்:**—நல்ல ஆசாரத்துடன் கூடிய பரிசாரமும் (நோயாளிக்கு சிசுருஷைசெய்பவன்) நம்பிக்கையுடனும், அநுகூலனுயும் நிறைய ஸம்பத்துள்ளவனாகவும், மன உறுதியுடன் கூடினவனாகவும், பெரியோர்கள் வைத்தியன். இவர்களிடத்தில் பக்தியுள்ளவனாகவும், மருந்து உண்பதில் வெறுப்பு இல்லாதவனாகவும் இருக்கும். நோயாளியும் ஆரோக்யத்திற்கு இன்றியமையாத சாதனங்கள்.

**அளவு பரிபாஷை:**—அளவு தெரியாமல் மருந்து சரக்குகளைச் சேர்க்கமுடியாது. ஆகவே மருந்து தயாரிப்பதற்கு அளவு தெரிய வேண்டுமாதலால் அது இங்கு சொல்லப்படுகிறது. காலிங்கம் என்றும் மாகதம் என்றும் அளவு இருவகைப்படும். காலிங்கத்தை விட மாகதம் என்ற அளவு உயர்ந்தது என்பது பெரியோர்களின் அபிப்பிராயம். இனி மாகதம் என்ற அளவு சொல்லப்படுகிறது. முப்பது பரமாணுக்கள் கொண்டது ஒரு த்ரஸரேணுவாகும். த்ரஸரேணுவுக்கு வம்சீ என்ற மற்றொரு பெயர் உண்டு. வீடுகளில் ஜன்னல்வழியாக வரும் சூரிய ரச்மியில் காணப்படும் ஓர் தூளி த்ரஸரேணுவாகும். ஆறு வம்சீ கொண்டது ஒரு மரீசி ஆகும். ஆறு மரீசி கொண்டது ஒரு ராஜிகா. மூன்று ராஜிகா ஒரு ஸர்ஷபம் எட்டு ஸர்ஷபம் ஒரு யவம். நான்கு யவம் ஒரு குஞ்ஜா (குஞ்ஜா என்பது குன்றுமணி குஞ்ஜா என்பதற்கு ரக்திகா என்ற மற்றொரு பெயர் உண்டு. ஆறு குஞ்ஜா அல்லது ரக்திகா கொண்டது ஒரு மாஷம். மாஷத்திற்கு ஹேம என்றும் தானகம் என்றும் இரண்டு வேறுபெயர்கள் உண்டு. நான்கு மாஷம் ஒரு சாணம். சாணத்திற்கு தரணம் என்றும் டங்கம் என்றும் வேறு இரண்டுபெயர்கள் உண்டு. இரண்டு சாணம் ஒரு கோலம், கோலத்திற்கு க்ஷுத்ரகம், வடகம், த்ரங்க்ஷணம், என்ற மூன்று பெயர்கள் உண்டு. இரண்டு கோலம் ஒரு கர்ஷம், கர்ஷத்திற்கு பாணிமானிகா, அக்ஷம், பிசு, பாணிதலம், பாலவி, திந்துகம், பிடாலபதகம், ஷோடசிகா, கரமத்யம், ஹம்ஸபதம், ஸுவர்ணம், கவலக்ரஹம், உதும்பரம், என்று 13 வேறு பெயர்கள் உண்டு. இரண்டு கர்ஷம் கொண்டது அரைப்பலமாகும். அதற்கு சுக்தி, அஷ்டமிகா, என வேறு இரண்டு பெயர்கள் உண்டு. இரண்டு அரைப்பலம் கொண்டது ஒரு பலமாகும். பலம் என்பதற்கு முஷ்டி, ஆம்ரம்,

# ஹ்ருதயம்.

(வைத்திய வாசஸ்பதி கரூர் பண்டிட் P. S. ராமசர்மா)

இவ்வியாசத்தில் க்லோமனென்ற உறுப்பைப்பற்றித்தன்மதத்திற்குப் பொருந்தாதென பத்ரிராதிபராலும்தன்மதத்திற்குமிகப்பொருத்த முள்ளதென Dr. V அச்சுதன் நாயர் அவர்களாலும்உபபாதிக்கப்பட்டவியாக்யான வசனங்களை விமர்சம் செய்யப்போகிறோம். இவ் வசனங்கள் இரண்டெனகூறப்படுகின்றது. முதல் வசனம் "க்லோமா = வ்ருக்காத் ஊர்த்வம் பிபாஸாஸ்தானம்" என்பது. இதன் பொருள்—மூத்திரக்குண்டிக்காய்க்கு மேலே யமைந்துள்ள பிபாஸாஸ்தானமான ஓர் உறுப்பு என்பதாகும். சரீரத்தில் இரண்டு மூத்திரக் குண்டிக்காய்கள் அமைந்துள்ளன. அவற்றுள் வலதுபக்கமுள்ள மூத்திரக்குண்டிக்காயை இங்கு எடுத்துக்கொண்டால் அதற்கு மேலே உள்ள உறுப்பை நாம் ஆராய்ந்தால் அது பித்தப்பையாகும் கிரஹணி என்ற உறுப்பானது வலது விருக்கத்துடன் நெருங்கி அதற்கு இடப்பக்கமாக அமைந்துள்ளது. இந்த கிரஹணி என்ற உறுப்பு க்லோமாவாக இருந்தால் "ஊர்த்வம்" என்ற பதம் பொருந்தாது. தவிர "விருக்கஸ்ய வாமத: பிபாஸா ஸ்தானம்" என்று என வியக்தி இருக்கவேண்டும். "விருக்காத்" என்ற ஐந்தாவது வேற்றுமையும் க்லிஷ்டமாகும். இரண்டாவது வசனம்—" "க்லோம = காலகண்டாத் அதஸ்திகம் தக்ஷிண பார்சுவஸ்தம்" என்பது. இதன் பொருள் —யக்ருத் என்ற உறுப்பின்கீழ் வலது பக்கமாக அமைந்துள்ளது க்லோம என்பதாகும். இங்கு யக்ருத்திற்குக் கீழ் இருப்பது என்ற பாகம் கிரஹணிக்குப் பொருத்தமே. ஆனால் "தக்ஷிணபார்சுவஸ்தம்" என்ற பாகம் கிரஹணிக்குப் பொருந்தாது. ஏனெனில் தக்ஷிண பாகத்தில் அமைந்துள்ளது விருக்கமாகும். கிரஹணிக்கு வலதுபக்கமாக நெருங்கியிருப்பது விருக்கமாகும். இவ்விதம் இந்த இரண்டு வசனங்களும் கிரஹணிதான் க்லோமா என்பதைக் கொஞ்சமும் காட்டமுடியாதநிலைமையில் இருக்கின்றன. இதே வசனங்கள் தன் மதத்திற்குப் பொருத்தமுள்ளவை யென்று டாக்டர் V. அச்சுதன் நாயர் அவர்கள் நம்புவது ஆச்சரியமாக இருக்கிறது பிரத்யக்ஷசவ பரீக்ஷையில் என்னைப்போன்றவர்களுக்குப் பரிசயம் கிடையாது. ஆகவே நானும் டாக்டர் V. N. நாயர் அவர்களும் மற்றவர்களும் தவறி விடுவது மிகுந்த குற்றமா

காது. சவபரிசோதனையில் பூர்ணமாகப் பயிற்சிபெற்ற அச்சுதன் நாயர் அவர்கள் தவறுவது அதீதமாகும். Deodenum என்ற கிரஹணிக்கும் தக்ஷிண விருக்கம் என்ற right kidneyக்கும் உள்ள சம்பந்தத்தை நாம் Gray's anatomy என்ற ஆங்கில புத்தகத் Fig 1064ல் பார்க்கலாம். இந்தப்படத்தில் வலது விருக்கமும் கிரஹணியும் நெருங்கி நிற்பதையும் வலது விருக்கத்திற்கு இடது பக்கத்தில் கிரஹணி அமைந்திருப்பதையும் பூர்ணமாகப்பார்க்கலாம். இந்த புத்தகத்தைப் பாடசாலையில் நமது டாக்டர் அச்சுதன் நாயர் அவர்கள் பூர்ணமாகப் படித்திருப்பதால் இதை ஞாபகத்திற்கு கொண்டுவருவது கஷ்டமில்லை. இந்த உபபாதனத்தால் இவ்வசனங்கள் சற்றும் நாயர் அவர்களின் மதத்திற்குப் பொருந்தாமல்போவதுடன் விருத்தமென்பதும் வியக்தம். இவ்வசனங்கள் மற்ற பூர்வ வசனங்களுடனும் மற்ற வியாக்யான வசனங்களுடனும் விரோதிப்பதும் வெளிப்படை. அச்சுப்பிழை அல்லது சோதக தோஷ காரணமாகவோ என நினைப்பதில் ஔசித்யமும் இல்லை.

## உண்மை வெளிப்பட்டது.

(K, S. பண்டிட்)

டாக்டர் V. அச்சுதன் நாயர் அவர்கள் சந்திரிகையில் தொடர்ச்சியாக வெளியிட்டுள்ள வியாசங்களை நான் விடாமல் படித்துவந்துளேன். இந்த வியாசங்களுக்கு ஆசிரியர் அச்சுதன் நாயர் அவர்கள் தானோ அல்லது வேறு யாராவது புனைப்பெயருடன் எழுதுகின்றார்களா என நான் பலதடவைகளில் சந்தேகித்தது உண்டு. ஒரு வியாசங்களின் உபஸம்ஹாரத்தில் சில வாக்யங்கள் காணப்படுகின்றன. அதன் சுருக்கமாவது—"நான் ஓர் கொள்கையை நிரூபித்தேன். அதைப்பற்றி வாசகர்கள் அபிப்பிராயம் கூறவேண்டும் என்பதே. இங்கு சற்று கவனிக்கவேண்டும். கொள்கையை நிரூபித்தவர் டாக்டர் V. N. நாயர் அவர்கள் ஆவர். கடைசியில் சில மறுப்புகள் எழுத ஆரம்பித்தவர் அச்சுதன் நாயர் அவர்கள். அச்சுதன் நாயர் அவர்கள் தன்னை மறந்து அல்லது V. N. அவர்களுடன் அபேதத்தை அனுபவித்து இவ்விதம் எழுதினார்களா? அல்லது V. N. நாயர் அவர்களோ புனைப்பெயருடன் வியாசம் எழுதிவரும்போது மறந்து தன்னை வெளிப்படுத்தி விட்டார்களா? அச்சுதன் நாயர் அவர்களுடன் எனக்கு சுவல்ப பரிசயமும் உண்டு. மீமாம்சை முதலியவைகளில் திடமான சில நாட்களுள் பாண்டித்யம் பெற்று மறுப்பு எழுத முன்வந்ததைக் கண்டு என்னைப்போன்றவருக்கும் ஆச்சரியம் உண்டாவது இயல்பே. தயவுசெய்து அச்சுதன் நாயர் அவர்கள் மீமாம்சை முதலியவைகளை எப்பொழுது வாசித்தார்; எங்கு வாசித்தார். யாரிடம் கற்றார் என்று வெளியிட்டால் நன்றாக இருக்கும்.